சுருக்கம்

தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் – குடியிருப்புகள் ஒதுக்கீடு– திருநங்கைகளுக்கு தகுதிகளின் அடிப்படையிலும் காலி குடியிருப்புகளின் எண்ணிக்கையின் அடிப்படையிலும் வாடகை முறையில் ஒதுக்கீடு செய்து–ஆணை வெளியிடப்படுகிறது.

==================== ========= == ====================

வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்(குமா1(1)துறை

அரசாணை (நிலை) எண்.174 நாள்: 17.12.2018

விளம்பி வருடம், மார்கழி 2,

திருவள்ளுவர் ஆண்டு 2049

படிக்கப்பட்ட து:

1. அரசாணை(2ப)எண்:202 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் (குமா1(1)) துறை, நாள் 22.10.2015.
2. தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரிய முதன்மைச் செயலாளர்/ மேலாண்மை இயக்குநரின் ந.க.எண்.ஜி1/1952/2017, நாள்.08.10.2018, 31.10.2018, 23.11.2018.

=== ==

ஆணை:

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையின்படி, சென்னையில், சமூகநலத்துறையால் திருநங்கைகள் என கண்டறியப்பட்டு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ள மொத்தமுள்ள 260 திருநங்கைகளில் ஏற்கெனவே விசாரணை செய்து அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்ட 23 நபர்களுக்கும், மீதமுள்ள 237 நபர்களில் குடிசைப்பகுதி மாற்று வாரிய எஸ்டேட் அலுவலர் மூலமாக விசாரணை மேற்கொண்டு அவர்களில் தகுதியுடைய நபர்களுக்கும் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரிய குடியிருப்புகள் ஒதுக்கீடு செய்ய ஆணையிடப்பட்டுள்ளது.

2. மேலே, இரண்டாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் சென்னை மற்றும் காஞ்சிபுரம் மாவட்ட சமூக நல அலுவலர்களின் கடிதங்களில் திருநங்கைகளுக்கு குடியிருப்புகள் ஒதுக்கீடு செய்யுமாறு கேட்கப்பட்டுள்ளது என்றும், திருநங்கைகளுக்கு ஒதுக்கீடு செய்ய ஆணை வழங்கும் பொருட்டு வாரிய கூட்ட குழுவில் ஒப்புதல் பெறப்பட்டு தீர்மான எண்.5.01/488, நாள் 19.09.2018–ல் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரிய குடியிருப்புகளை "ஒதுக்கீடு கோரும் திருநங்கைகளுக்கு, குடிசைப்பகுதி வாழ்மக்களுக்கு ஒதுக்கீடு செய்ய பின்பற்றப்படும் விதிமுறைகளை பின்பற்றி ஒதுக்கீடு வழங்க ஆணை வேண்டி தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரிய மேலாண்மை இயக்குநர் அரசுக்கு தனது கருத்துருவினை அனுப்பியுள்ளார்.

3. தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரிய மேலாண்மை இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமாக ஆய்வு செய்தது. ஆய்விற்குப் பின், மேலே இரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தின்படி தேர்வு செய்யப்பட்ட 255 திருநங்கைகள் மட்டுமல்லாமல் இனி எதிர்காலத்தில் வாரியக் குடியிருப்புகளை ஒதுக்கீடு கோரும் திருநங்கைகளுக்கு குடிசைப்பகுதி வாழ்மக்களுக்கு ஒதுக்கீடு செய்ய பின்பற்றப்படும் விதிமுறைகளை பின்பற்றுவதோடு, தகுதிகளின் அடிப்படையிலும் காலி

குடியிருப்புகளின் எண்ணிக்கையின் அடிப்படையிலும் வாடகை முறையில் ஒதுக்கீடு செய்ய அரசு ஆணையிடுகிறது.

//ஆளுநரின் ஆணைப்படி//

ச.கிருஷ்ணன்
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம்,
சென்னை –600 035.

<u>நகல்</u>
துணை முதலமைச்சர் அலுவலகம்,
சென்னை – 600 009.
அமைச்சர் (சமூக நலம் மற்றும் சத்துணவு) அலுவலகம்,
சென்னை – 600 009.
மாவட்ட ஆட்சியர்,
சென்னை–600 001
சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை,
சென்னை – 600 009.
முதன்மைச் செயலாளரின் முதன்மை தனிச்செயலாளர்,
வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை,
சென்னை – 600 009.
வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்(அநமு–1/வ.செ)துறை,
சென்னை – 600 009.
இருப்புக் கோப்பு/உதிரி நகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

17/12/18
பிரிவு அலுவலர்
17/12/2018